දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax 011 - 2338635
දුරකථන / தொலைபேசி / Telephone 011- 2135406/ 2135410/ 2135412 / 2135413
E-Mail - tpl@ird.gov.lk / itp@ird.gov.lk
Web: www.ird.gov.lk

**சுற்றறிக்கை இல**: SEC/2023/E/06 2023, **செப்தம்பர்** 25

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான சுற்றறிக்கை

## சிரேஷ்ட பிரஜைகளின் காலாண்டு வருமான வரி மீளளிப்பு

இச் சுற்றறிக்கையானது 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 150 (2அ) ஆம் பிரிவின் பிரகாரம், சிரேஷ்ட பிரஜைகளினால் மேற்கொள்ளப்பட்ட காலாண்டு வருமான வரி மீளளிப்பு கோரிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

1. இப் பொறிமுறையின் கீழ் மீளளிப்பு கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான தேவைப்பாடுகள்

(அ) விண்ணப்பதாரி
- வதிவுள்ள தனியாளாக இருத்தல் வேண்டும் மற்றும்
- வரி மதிப்பீட்டாண்டின் எப்பகுதியிலேனும் 60 வயதுடையவராக அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்

(ஆ) வரி மதிப்பீட்டாண்டிற்குரிய மொத்த மீளளிப்பு கோரிக்கையானது ரூபா 60,000/- இற்கு மேற்படுதலாகாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு காலாண்டிற்கான மீளளிப்பு கோரிக்கையானது ரூபா 25,000/- இனை விஞ்சுதல் ஆகாது. காலாண்டுகள் பின்வருமாறு;

1 ஆவது காலாண்டு = ஏப்பிரல் 1 முதல் ஜூன் 30 வரை
2 ஆவது காலாண்டு = ஜூலை 1 முதல் செப்தம்பர் 30 வரை
3 ஆவது காலாண்டு = ஒக்டோபர் 1 முதல் திசம்பர் 31 வரை
4 ஆவது காலாண்டு = சனவரி 1 முதல் மார்ச் 31 வரை (அடுத்த கலண்டர் வருடம்)

(இ) விண்ணப்பதாரிக்கு ஏற்புடைய வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தப்படற்பாலதான தொகைகள் (காலாண்டு கொடுப்பனவுகளாக அல்லது இறுதி வருமான வரிக் கொடுப்பனவாக) இருத்தல் ஆகாது.

(ஈ) காலாண்டு ஒன்றுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச மீளளிப்புத் தொகையைக் கருத்திற் கொண்டு,

நிறுத்திவைத்தல் முகவர்களினால் (வங்கி மற்றும் நிதி நிறுவனங்களினால்) வட்டி மீது கழிக்கப்பட்ட முற்பண வருமான வரியானது (AIT) இந்த பொறிமுறையின் கீழ் மட்டுமே மீளளிக்கப்படும்.

2. மீளளிப்பைக் கோரும் சிரேஷ்ட பிரஜையொருவர், மீளளிப்பு கோரிக்கைக்கு முன்னராக அவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஏலவே பதிவுசெய்துகொள்ளவில்லை எனில், வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) ஒன்றினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பதிவு செய்துகொள்ள தேவைப்படுத்தப்படுகின்றனர். வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் ஆனது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தினூடாக (இ- சேவைகள் --> இ – சேவைக்கான அணுகுகை --> வரிசெலுத்துநர் பதிவு) இணையவழியாகவோ அல்லது கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ காடினியர் மாவத்தையில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் தலைமை காரியாலயத்தின் ஆரம்பப் பதிவுப் பிரிவில் அல்லது ஏதேனும் நகர அல்லது பிராந்திய அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

3. முறையாக நிரப்பப்பட்ட "சிரேஷ்ட பிரஜைகளின் மீளளிப்புக்கான பதிவுப் படிவமானது (படிவ இல. *RFN/WHT/01-T)* பூரணப்படுத்தப்பட்டு, சிரேஷ்ட பிரஜையின் நிரந்தர முகவரிக்கு அண்மையில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அல்லது நகர அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பதிவுப் படிவமானது ஒரு தரம் மாத்திரமே சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதில் தரப்பட்டுள்ள தகவல்களில் எதுவித மாற்றங்களும் காணப்படின், அத்தகைய மாற்றங்கள் ஏற்புடைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அல்லது நகர அலுவலகத்தில் திருத்தப்பட்ட படிவத்தை வழங்குவதன் மூலம் உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4. மீளளிப்புகளானது, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட "சிரேஷ்ட பிரஜைகளின் மீளளிப்பு கோரிக்கைக்கான விண்ணப்பத்தின் (படிவ இல. *RFN/WHT/02-T)* மூலம் கோரப்படுதல் வேண்டும். நிறுத்திவைத்தல் வரி மூல சான்றிதழ்களுடன் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்புடைய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அல்லது நகர அலுவலகத்தில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

1 ஆம் காலாண்டு (ஏப்பிரல் 01 முதல் ஜூன் 30 வரை) = ஜூலை 30 அன்று அல்லது அதற்கு பின்னர்

2 ஆம் காலாண்டு (ஜூலை 01 முதல் செப்தம்பர் 30 வரை) = ஒக்டோபர் 30 அன்று அல்லது அதற்கு பின்னர்

3 ஆம் காலாண்டு (ஒக்டோபர் 01 முதல் திசம்பர் 31 வரை) = சனவரி 30 அன்று அல்லது அதற்கு பின்னர்

4 ஆம் காலாண்டு (சனவரி 01 முதல் மார்ச் 30 வரை) = ஏப்பிரல் 30 அன்று அல்லது அதற்கு பின்னர்

5. "சிரேஷ்ட பிரஜைகளின் மீளளிப்பிற்கான பதிவுப் படிவம்" *(படிவ இல. RFN/WHT/01- T)* மற்றும் "சிரேஷ்ட பிரஜை – மீளளிப்பு கோரிக்கைக்கான விண்ணப்பம்" *(படிவ இல RFN/WHT/02-T)* என்பவை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அல்லது நகர அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படலாம் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்கள வலைதளமாகிய http://www.ird.gov.lk/en/Downloads/SitePages/Forms.aspx?menuid=1603 இலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

6. காலாண்டு ஒன்றிற்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரமே சமர்ப்பிக்கப்படலாம். ஆயினும் ஏற்புடைய அந்த காலண்டுகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்புடைய உரிய திகதிகளுக்கு பின்னர் சேர்த்து சமர்ப்பிக்கப்படலாம். எவ்வாறாயினும், மீளளிப்பு கோரிக்கைக்கான அனைத்து காலாண்டுக்கான விண்ணப்பங்களும் வரிமதிப்பாண்டின் பின்னர் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அந்த திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கோரிக்கையும் அந்த வரிமதிப்பீட்டாண்டின் வருமான வரி விபரத்திரட்டினூடாக கோரப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த பொறிமுறையானது அத்தகைய சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாக மாட்டாது.

7. சிரேஷ்ட பிரஜைகள், தங்கள் நிரந்தர முகவரி அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அல்லது நகர அலுவலகத்திலிருந்து, திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய படிவங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அவ் உத்தியோகத்தர்களை தொடர்புகொள்வதன் மூலம் படிவங்களை நிரப்புவதற்கு தேவையான உதவியையும் பெற்றுக்கொள்ளலாம். இவ் விடயம் தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவைப்படின், நீங்கள் www.ird.gov.lk என்ற உள்நாட்டு இறைவரி வலைதளத்திற்கு சென்று அல்லது 1944 இனூடாக உள்நாட்டு இறைவரி அழைப்பு நிலையத்தைத் தொடர்பு கொண்டு அவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்

8. மீளளிப்புக் கோரிக்கைக்கான கொடுப்பனவுகள் பதிவுப் படிவத்தில் வெளிப்படுத்தியுள்ளவாறு ஏற்புடைய சிரேஷ்ட பிரஜையின் பெயரிலுள்ள வங்கி கணக்கிற்கு மாத்திரம் மாற்றீடு செய்யப்படும். ஆகவே, படிவத்திலுள்ள வங்கி கணக்கு விபரங்கள் சரியாக இருத்தல் வேண்டும். சிரேஷ்ட பிரஜையின் வங்கிக் கணக்கின் விபரங்களை வெளிப்படுத்தும் வங்கிப் புத்தகத்தின் முன்பக்கங்கள் அல்லது வங்கிக் கூற்றின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படுதல் வேண்டும். எச் சந்தர்ப்பத்திலும் மீளளிப்புக் கொடுப்பனவுகள், பதிவுப் படிவத்தில் வெளிப்படுத்தப்படாத வங்கிக் கணக்கிற்கு காசாகவோ அல்லது காசோலையாகவோ மேற்கொள்ளப்படமாட்டாது.

9. மீளளிப்பு கொடுப்பனவு கோரிக்கையானது, வருமான வரி காலாண்டு கூற்றினை கோப்பிடுதல் மற்றும் ஏற்புடைய நிறுத்திவைத்தல் முகவர் ஊடாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு முற்பண மாதாந்த வரியினை அனுப்பிவைத்தல் என்பவற்றுக்கு உட்பட்டது.

10. மீளளிப்புக் கோரிக்கையானது, இந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தி ஏற்புடைய பிராந்திய அலுவலகம்/நகர அலுவலகத்திற்கு "சிரேஷ்ட பிரஜைகளின் – மீளளிப்புக் கோரிக்கைக்கான விண்ணப்த்துடன்" தேவையான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் செயன்முறைப்படுத்தப்படும்.

11. தேவையான அனைத்து தகவல்களும் குறிப்பிடப்பட்ட படிவங்களினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை உண்மையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும். மேலும், அத்தகைய தகவல்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையுடன் (RAMIS - ரமீஸுடன்) சிரேஷ்ட பிரஜைகளினால் வழங்கப்பட்ட தகவல்கள் ஒத்து போதல் வேண்டும். ஆகவே, "சிரேஷ்ட பிரஜைகளின் – மீளளிப்புக் கோரிக்கைக்கான விண்ணப்பத்தினை" சமர்ப்பிப்பதற்கு முன்னர் ரமீஸினை இற்றைப்படுத்துவதற்கு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். இப் படிவத்தில் பிழையான அல்லது தவறான தகவல்கள் வழங்குதல் மற்றும் உரித்தற்ற மீளளிப்புகளை கோருதல் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 181 ஆம் பிரிவின் கீழ் தண்டம் விதிப்பதற்கு இட்டுச்செல்லும்.

உபுல் ஜயவர்த்தன
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

D. Upul A. Jayawardhana
Commissioner General of Inland Revenue (Acting)
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02